உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.71/2024

| | |
|---|---|
| பெயர் | :செல்வமணி(அ.சா.2) |
| தகப்பனார் பெயர் | :சொக்கன் |
| கணவர் பெயர் | : |
| வயது | :58 |
| கிராமம் | :அய்வத்தான்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :விவசாயம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

02.06.2025

முதல் விசாரணை:

அ.சா.1 ஆன சரவணகுகனை எனக்கு நன்கு தெரியும் அவர் எனக்கு உறவினர் ஆவார். ஆஜர் 3 எதிரிகளும் எனக்கு நன்கு தெரியும். ஆஜர் 3ம் எதிரி அபிமன்னன் என் அண்ணன் ஆவார். 1, 2 எதிரிகள் அவரது மகன்கள் ஆவார். என்னுடைய இளைய மகன் தீபன் சக்கரவர்த்தி வீடு கட்டுவதற்காக எங்களுடைய இடத்தில் 10.01.2023 அன்று மாலை சுமார் 6-7 மணிக்குள்ளாக அய்வத்தான்பட்டியில் உள்ள ஆஜர் எதிரிகளுக்கும், எங்கள் இடத்திற்கும் இடையே உள்ள பாதையை வந்து பார்த்து கொண்டிருந்தார். ஆஜர் 3ம் எதிரி என்னுடைய இடத்தில் ஆக்கிரமித்து 5 அடி அளவில் காம்பவுண்ட் சுவர் எழுப்பிவிட்டார். தீபன் சக்கரவர்த்தி வழியை மறித்து ஆஜர் 3வது எதிரியை பாதையை கட்டிவந்ததால் என்னிடம் இதுபற்றி கேட்டு நின்றிருந்தார். ஆஜர் 3வது எதிரி அபிமன்னன் என் மகனை பார்த்து உனக்கு பாதை இல்லை என்றும் நீ என்ன சொத்தில் உரிமை கேட்பது என்றும்

திட்டினார். நான் ஆஜர் 3வது எதிரியை பார்த்து எதற்காக அசிங்கமான வார்த்தையை பயன்படுத்தி பேசுகிறீர்கள் என்று கேட்டேன். அவருடைய மூத்த மகனான செல்வேந்திரனை அழைத்து அரிவாளை எடுத்து வரும்படி கூறினார். சரவண குகன் என்னுடைய வளர்ப்பு மகன் சண்டை போட்டுகொள்ள வேண்டாம் என்று இடையில் வந்து மறித்தார். என் இளைய மகன் தீபன் சக்கரவர்த்தியை ஆஜர் முதலாவது எதிரி அரிவாளை கொண்டு வெட்ட வந்தவரை என்னுடைய மகனானன சரவணகுகன் இடையில் வந்து மறித்தார். பிரச்சினை செய்து கொள்ளவேண்டாம் என்றும் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று சரவண குகன் சொல்ல ஆஜர் 1வது எதிரி செல்வேந்திரன் சரவணகுகனின் நடுமண்டையில் அரிவாளை கொண்டு வெட்டிவிட்டார். வெற்றிவேந்தன் ஆஜர் 2வது எதிரி சரவணகுகனின் கைகளை பின்னால் இறுக்க பற்றி கொண்டார். ஆஜர் 3 எதிரிகளும், சரவணகுகனின் கழுத்தில் 2ம் எதிரி கல்லால் குத்திவிட்டார். அதில் அ.சா.1 சரவணகுகன் மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டார். அவரை 108 ஆம்புலன்சில் அழைத்து சென்று கருங்காலக்குடி முதலுதவி மையத்திற்கு சென்றோம். அங்கிருந்து மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு பார்க்க முடியாது என்று கூறவே மதுரை அரசு இரசாசி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு சரவணகுகனை அழைத்து சென்றோம். தையல் போட்டு சரவணகுகனை ஒருநாள் உள்நோயாளியாக சிகிச்சை செய்தார்கள். மருத்தவமனையில் இருந்து வந்தவுடனே மறுநாள் கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று சரவணகுகன் புகார் அளித்தார். இதுதொடர்பாக காவல்நிலையத்தார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

எனக்கு என் அண்ணனான 3ம் எதிரிக்கும் இடையே சுமார் 30 ஆண்டுகாலமாக என் அப்பா காலத்திற்கு பிறகு சொத்துபிரச்சினை

எனக்கும், ஆஜர் 3வது எதிரிக்கும், வீரணன் அம்பலம், சின்னச்சாமி ஆகியோருக்கிடையே இருந்து வருகிறது. சரவணகுகன் அவரது தாய் தந்தையரை இழந்து என்னிடம் வளர்ப்பு மகனாக இருப்பது 3ம் எதிரிக்கு பிடிக்கவில்லை. என்ன காரணம் என்று அவரை தான் கேட்க வேண்டும். ஏற்கனவே காம்பவுண்ட் சுவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டியது தொடர்பாக எங்களுக்குள் ஏற்கனவே தகராறு ஆகி 2 முறை காவல்நிலையத்தில் புகார் ஆகி நானும், ஆஜர் 3வது எதிரியும் சிறைக்கு சென்றுவந்தோம். சம்பவம் நடக்கும் போது தீபன் சக்கரவர்த்தி எங்கள் வீட்டின் அருகே தான் இருந்தார். சம்பவம் நடக்கும் போது வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டு இருக்கும் போது ஆஜர் 3வது எதிரி வயலில் இருந்து வந்து சரமாரியாக திட்ட ஆரம்பித்துவிட்டார். எதற்காக அவதூறாக பேசினார் என்றால் சொத்து பிரச்சினை சம்பந்தமாக நிலம் ஆக்கிரமிப்பு செய்து கட்டும் போது அவதூறாக பேசினார். எதற்காக பேசினார் என்று அவரிடம் தான் கேட்கவேண்டும். 3வது எதிரி அவதூறாக பேசவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3வது எதிரி, 1வது எதிரியை அரிவாளை எடுத்துவரும் படி கூறினார். ஆனால் வெட்டியது 1வது எதிரி. காவல்விசாரணையில் அபிமன்னன் எங்களை அவதூறாக பேசிவிட்டு அவர் தான் அரிவாளை எடுத்துவந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அது உண்மையா என்றால் உண்மைதான். சம்பவம் எதுவும் நான் சொல்வது போல நடக்கவில்லை என்றும், நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனான தீபன் சக்கரவர்த்தி மூலமாக புகார் அளித்தால் சொத்து பிரச்சினை ஆகிவிடும் என்பதால் வளர்ப்பு மகனாக சரவணகுகனைவைத்து பொய்யான ஒருபுகார் அளிக்க சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்சிற்கு ஊர்க்காரர்கள் தான் தகவல் கொடுத்தார்கள். யார் தகவல் கொடுத்தார்கள் என்று தற்போது நினைவில்லை. சம்பவ இடத்திற்கு சம்பவம் நடந்த பிறகு பக்கத்து

வீட்டுகாரர்கள் வந்தார்கள். கவிச்சந்திரன் S/o அம்மாசி, பத்மினி மற்றும் பெண்கள் அங்கு வந்தார்கள். நான் சொல்வது போல பத்மினி, மற்றும் பெண்கள் வந்து சண்டையை விலக்கியதாக கூறுவது தவறு என்றும் ,அவ்வாறு அவர்கள் செய்திருந்தால் சாட்சி பட்டியலில் அவர்களது பெயரை சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு அருகே சுமார் 4-5 வீடுகள் இருக்கிறது. எங்கள் வீடு ஊரில் இருந்து சுமார் அரை கிலோமீட்டர் தொலைவில் தள்ளி இருக்கிறது. என் வீட்டிற்கு அருகே யார் யார் வீடு இருக்கிறது என்றால் என் அண்ணன் மகன் ராஜாவின் வீடு, என் அக்கா மகன் வீரபாண்டி என்பவருக்கு வீடும் உள்ளது. அவர்களெல்லாம் சண்டையை விலக்க வரவில்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றும் வீட்டிற்கு அருகே இருப்பவர்கள் வந்து விலக்கவில்லை என்று சொன்னால் சாலையில் வருபவர்கள், போவர்கள் வந்து விலக்கினார்கள். உண்மையில் சண்டை அப்படிநான் கூறியவாறு நடக்கவில்லை என்றும்அவ்வாறு இருந்திருந்தால் வீட்டின் அருகில் இருப்பவர்கள் வந்து விலக்கியிருப்பார்கள் என்றும் மற்றும் அவர்களின் பெயர்களை சாட்சி பட்டியலில் சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று மறுநாள் மதியம் சுமார் 2.00 மணியளவில் அரசு ராசாசி மருத்துவமனையில் இருந்து சரவணகுகனை விடுவித்துவிட்டார்கள். அன்று மாலை 6 மணியளவில் கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றோம். மறுநாள் மதியம் சுமார் 3 மணியளவில் நானும், சரவணகுகனும், தீபன் சக்கரவர்தியும், என் மனைவிதிலகமும், ஆஜர் எதிரிகள் இருக்கும் தோப்பிற்கு சென்று வெட்ட முயற்சித்தோம் என்றும் அதை 3ம் பிரதிவாதி அக்கா தடுக்க முற்படவே அக்கா மீது வெட்டு விழுந்தது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு அது PRC No.46/2023 என்று எண் கொடுக்கப்பட்டு தற்போது முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து பிரச்சினையை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக

ஒருபொய்புகாரை கொடுத்து தற்போதுஆஜர் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து பொய்கட்சியாடிவருகிறோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்குசம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.06.02 18:32:52 +0530

Assistant Sessions Judge

Melur